வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 12.6.2025 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

அகமதாபாத்தில் விமானம் விபத்துக்குள்ளானதை அறிந்து, தாம் இதயம் நொறுங்கி பெருந்துயர் அடைந்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

வரும் 21-ஆம் தேதி சர்வதேச யோகா தினத்தன்று, நாடு முழுவதும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில், யோகா நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

விவசாய வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தினால், வேளாண் ஆராய்ச்சிக்கும் சாகுபடிக்கும் இடையே, வித்தியாசம் நீங்கி இருப்பதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் இன்று, வில்லியனூரில் நடைபெற்ற, வேளாண் வளர்ச்சி இயக்கத்தின் நிறைவு விழாவில், மாநில வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

*விமான விபத்து*

அகமதாபாத்தில் விமானம் விபத்துக்குள்ளானதை அறிந்து, தாம் இதயம் நொறுங்கி பெருந்துயர் அடைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். துயரகரமான இத்தருணத்தில், பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய சிந்தனையில் தாம் மூழ்கி இருப்பதாகவும் உதவி-மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்பில் இருப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அகமதாபாத்தில் இருந்து இன்று பிற்பகல் லண்டனுக்கு புறப்பட்ட ஏர்-இண்டியா விமானம், சில நிமிடங்களிலேயே கீழே விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது குறித்து தகவல் வெளியான உடன் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு ராம்மோகன்

நாயுடுவை, பிரதமர் தொடர்பு கொண்டு, நிலவரங்களைக் கேட்டறிந்தார். உடனடியாக அகமதாபாத்திற்கு விரைந்து, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எல்லா உதவிகளும் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு, இரு அமைச்சர்களுக்கும் அவர் அறிவுறுத்தினார்.

உதவி-மீட்பு பணிகளை நேரடியாக மேற்பார்வை செய்ய தாம் அகமதாபாத்திற்கு விரைவதாக திரு ராம் மோகன் நாயுடு, பிரதமரிடம் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட அனைத்து அமைப்புகளும் உடனடியாக உஷார் படுத்தப்பட்டு உதவி- மீட்பு பணிகள் ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

மத்திய உள்துறை அமைச்சரிடம் பிரதமர் பேசியதைத் தொடர்ந்து, குஜராத் முதலமைச்சர், மற்றும் மாநில முதலமைச்சரை, மத்திய உள்துறை அமைச்சர் தொடர்பு கொண்டு பேசினார்.

அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான விமானத்தில், 2 விமானிகள், 10 விமான சிப்பந்திகள் உட்பட 248 பேர் இருந்ததாகவும், இவர்களில் 169 பேர் இந்தியர்கள், 53 பேர் பிரிட்டீஷ் பிரஜைகள் என்றும், மத்திய சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

விபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன், தீயணைப்பு மற்றும் காவல் துறையினர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து உதவி மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். காந்தி நகரில் இருந்து, மொத்தம் 90 பேர் அடங்கிய, 3 தேசிய பேரிடர் மீட்புப் படைக் குழுக்கள் வரவழைக்கப் பட்டுள்ளனர். வதோதரா-வில் இருந்து இத்தகைய மேலும் 3 குழுக்கள் வரவழைக்கப் படுவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. உதவி-மீட்பு பணிகளை தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக, சுற்றுப்புற சாலைகளில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள், அகமதாபாத் சிவில் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பயணிகள் மற்றும் உறவினர்களுக்கு தேவையான தகவல்களை வழங்க, ஏர்-இண்டியா சார்பில், 1800-5691-44 என்ற பிரத்யேக உதவி எண் அறிவிக்கப் பட்டுள்ளது. விபத்து குறித்து கூடுதல் விவரங்கள் சேகரிக்கப் படுவதாகவும் ஏர் இண்டியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏர் இண்டியா தலைவர் திரு என் சந்திரசேகரன், விபத்து குறித்து துயரம் வெளியிட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு எல்லா வகையிலும் ஆதரவளிக்கவே, தற்போது முக்கிய கவனம் செலுத்தப் படுவதாகவும், ஏர்-இண்டியா நிறுவனம் தன் சக்திக்கு உட்பட்ட எல்லா

உதவிகளையும் அவசரகால மீட்பு படையினருக்கு வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விபத்து மற்றும் உதவி-மீட்பு பணிகள் தொடர்பான எல்லா தகவல்களையும் ஒருங்கிணைக்க மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தில், தனி கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. விமான விபத்துகள் பற்றிய விசாரணைப் பிரிவின் தலைமை இயக்குநர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் அகமதாபாத்திற்கு விரைந்துள்ளனர்.

*யோகா தினம்*

வரும் 21-ஆம் தேதி சர்வதேச யோகா தினத்தன்று காலை 6.30 முதல் 7.40 மணி வரை, நாடு முழுவதும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில், அனைவருக்குமான யோகா செயல் திட்டத்தின் அடிப்படையில் யோகா நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. ஒரே நாடு-ஒரே சுகாதாரம் என்ற கருப்பொருள் அடிப்படையில், இவ்வாண்டு சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படும் என, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். யோகா சங்கம் நிகழ்ச்சிகளை நடத்த, நாடு முழுவதும் 5ஆயிரத்திற்கு மேற்பட்ட அமைப்புகள் பதிவு பெற்றுள்ளதாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடியின் பங்கேற்புடன் விசாகப்பட்டிணத்தில் நடைபெற உள்ள பிரதான விழாவில், சுமார் 40 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொள்ள இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். பின்னர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் ஆகாஷ்வாணிக்கு பிரத்யேக பேட்டி அளித்தார்.

பேட்டி குறித்து கூடுதல் விவரங்கள் …………

**(வாய்ஸ்)**

*யோகா தினம்*

**(வாய்ஸ்)**

இந்தியாவிலும், உலக அளவிலும், புரட்சிகரமான உடல் நலப் பழக்கமாக யோகாவை மாற்ற அரசு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக. மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார். யோகா மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கு தனி அமைச்சகம் அமைக்கப்பட்டது முதல், சர்வதேச யோகா தினத்திற்கு அங்கீகாரம் பெற்றது வரை, பல்வேறு நடவடிக்கைகள் இதில் அடங்கும் என்று அவர் அவர் தெரிவித்தார். பணியிடத்தில் யோகா பயிற்சிக்கான தனி இடைவேளை, பணிச்சுமை அதிகம் உள்ளவர்கள் மன இறுக்கத்தை சமாளிப்பதற்கான **5 நிமிட யோகா விளக்கப் படம்** போன்ற **தொழில் நுட்பத் தலையீடுகளும்** பயன் உள்ள முறையில் அமைந்து இருப்பதாக அமைச்சர் கூறினார்.

*விக்சித் கிரிஷி*

விவசாய வளர்ச்சிக்கான **விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான்** இயக்கத்தினால் வேளாண் ஆராய்ச்சிக்கும் களநிலை சாகுபடிக்கும் இடையே வித்தியாசம் நீங்கி, இந்திய வேளாண் துறையை, ஏற்றுமதி நோக்குடன் கூடிய, இலாபகரமான, நீடித்த துறையாக மேம்படுத்த வழி ஏற்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார். வேளாண் வளர்ச்சி இயக்கத்தின் இறுதி நாளான இன்று, குஜராத் மாநிலம் **பர்தோலி**யில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்

(வாயஸ்)

*விக்சித் கிரிஷி*

**(வாயஸ்)**

விக்சித் பாரத் இயக்கத்தின் ஒரு பகுதியாகவே விக்சித் கிரிஷி இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் வேளாண் துறையில் சுயசார்பு நாடாக மட்டுமின்றி, உலகின் உணவுக் கூடையாக இந்தியாவை மேம்படுத்துவதே அரசின் நோக்கம் என்றும் மத்திய வேளாண் அமைச்சர் கூறினார். இவ்வாண்டு நாடு முழுவதும் 7.5 லட்சம் ஹெக்டேர் நிலங்களை, இரசாயனப் பயன்பாடு இல்லாத சாகுபடியின் கீழ் கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளதாகவும் 18 லட்சம் விவசாயிகளின் பங்கேற்புடன் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இயற்கை வேளாண்மை மற்றும் பல்வகை பயிர் சாகுபடியில் முன்னணி மாநிலமாக குஜராத் திகழ்வதை அவர் பாராட்டினார்.

*விக்சித் கிரிஷி*

இந்த விவசாயிகள் மாநாட்டில், குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் உட்பட பலர் கலந்து கொண்டனர். குஜராத்தில், வாழை, காய்கறி வகைகள் மற்றும் தோட்டக் கலை பயிர்களின் சாகுபடி தொடர்பாக பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தகைசால் மையங்களை, முதலமைச்சரும், மத்திய வேளாண் அமைச்சரும் இணைந்து மெய்நிகர் முறையில் தொடக்கி வைத்தனர்.

*புதுச்சேரி-வேளாண் இயக்கம்*

புதுச்சேரியில் இன்று வில்லியனூரில் நடைபெற்ற, விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான் இயக்கத்தின் நிறைவு விழாவில் மாநில வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். புதுச்சேரியில் அனைத்து விவசாய மோட்டார்களுக்கும் ஒரே நேரத்தில் சோலார் மின் வசதி பொருத்தப்பட உள்ளதாகவும், இதன் மூலம் உபரி மின்சாரத்தை அரசுக்கு வழங்கி கூடுதல் வருமானம் ஈட்ட முடியும் என்பதால் விவசாயிகள் சோலார் மின்வசதிக்கு மாற

தயங்க வேண்டாம் என்றும் அவர் கூறினார். எதிர்காலத்தில் விவசாயம் தான் சாதனை தொழிலாக இருக்கும் என்பதால் விவசாயிகள் தங்களின் நிலத்தை கை விடாமல் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் திரு ஜெயக்குமார் வலியுறுத்தினார். விவசாயிகளுக்கு மண் வள அட்டைகளையும் அவர் வழங்கினார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகமும், மாநில அரசின் வேளாண் துறை, மற்றும், பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியில், வில்லியனூர், ஒதியம்பட்டு, அரியூர், திருக்காஞ்சி, கூடப்பாக்கம் மற்றும் இருளன் சந்தை பகுதிகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

*வானிலை*

இன்று தென்னிந்தியப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும், வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா பகுதிகளின் மேலடுக்கு சுழற்சியும் நிலவுகின்றன. வரும் 18-ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய தினம், கோவை, மற்றும் நெல்லை மாவட்ட மலைப் பகுதிகளிலும், நீலகிரி, தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்ககடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக செங்கல்பட்டு மாவட்டம் செய்யூரில் 10 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 9 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

*விளையாட்டு*

ஐசிசி உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன் பட்டப் போட்டிகளில் ஆஸ்திரேலியா- தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே லண்டனில் நடைபெறும் இறுதிப் போட்டியின் 2-ஆம் நாளான இன்று சற்று முன் வரை, தென்னாப்பிரிக்கா அணி, தனது முதலாவது இன்னிங்சில், ---------- விக்கெட் இழப்பிற்கு, ------- ரன் எடுத்து இருந்தது. ஆஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 212 ரன். இதற்கிடையே, சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் ஹாக்கி புரோ லீக் போட்டித் தொடரில் நெதர்லாந்தின் **ஆம்ஸ்டெல்வீன்** நகரில் இன்று மாலை நடைபெறும் போட்டியில், இந்திய ஆடவர் அணி, அர்ஜென்டினா அணியுடன் மோதுகிறது.

*ராஜ்நாத் என்சிசி*

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அண்மையில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த என்சிசி மாணவர்களை பாராட்டி கவுரவித்தார். கடினமான சூழ்நிலைக்கு இடையிலும், எவருக்கும் எந்த காயமும் ஏற்படாமல் என்சிசி மாணவர்கள் எவரெஸ்ட் சிகரத்தை எட்டியதை பாராட்டி, 10 லட்சம் ரூபாய் பரிசுக்கான காசோலை ஒன்றையும் அவர் வழங்கினார். தேசிய மாணவர் படையினர், ஒட்டுமொத்த இளைய தலைமுறைக்கே ஊக்கமளிக்கும் வகையில் செயல்படுவதாக திரு ராஜ்நாத் சிங் பாராட்டினார். இவர்கள் இதே துணிச்சல் மற்றும் மனஉறுதியுடன் எதிர்கால சவால்களையும் சமாளிப்பார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டார். கடந்த மாதம் 18-ஆம் தேதி எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த என்சிசி மலையேற்றக் குழுவில், 5 மாணவிகள், மற்றும், 5 மாணவர்கள் இடம் பெற்றனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

அகமதாபாத்தில் விமானம் விபத்துக்குள்ளானதை அறிந்து, தாம் இதயம் நொறுங்கி பெருந்துயர் அடைந்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

வரும் 21-ஆம் தேதி சர்வதேச யோகா தினத்தன்று, நாடு முழுவதும் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில், யோகா நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

விவசாய வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தினால், வேளாண் ஆராய்ச்சிக்கும் சாகுபடிக்கும் இடையே, வித்தியாசம் நீங்கி இருப்பதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார்.

புதுச்சேரியில் இன்று, வில்லியனூரில் நடைபெற்ற, வேளாண் வளர்ச்சி இயக்கத்தின் நிறைவு விழாவில், மாநில வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/12.6.2025/Script.

-------------------------